# போராட்டம்

Transcribed from a message spoken in September, 2012 in Chennai

By *R.S. Milton*

## தேவ மக்களின் சாட்சி

“நல்ல இளைப்பாறுதலுள்ள, சமாதானமுள்ள வாழ்க்கை வாழ்ந்தேன்,” என்று பவுல் சொல்ல வில்லை. ஆகவே, கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டதிலிருந்து சாகும்வரை, நான் ஈசாக்கைப் போல் என் கூடாரத்தில் சமாதானமுள்ள வாழ்க்கை வாழ்ந்தேன்,” என்று தேவனுடைய பிள்ளைகள் சொல்வது புதிய ஏற்பாட்டு சாட்சியாக இருக்கும் என்று என்னால் சொல்லமுடியாது. புதிய ஏற்பாட் டில், “நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண் டேன்,” என்பதுதான் தேவனுடைய மக்களின் சாட்சி (2 தீமோ. 4:7). பவுல் தேவனுடைய பிள்ளை களுக்கு எழுதிய கடிதத்தில், “தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட் டான்,” (2 தீமோ. 2:4) என்று எழுதுகிறார். அவர் தன்னை மட்டும் அல்ல, தன்னோடு சேர்ந்து ஊழி யம்செய்கிற சக-சகோதரர்களையும் போர்வீரர்களாகக் கருதிப் பேசுகிறார் அல்லது ஓட்டப்பந்தய வீரனாக ஒப்பிட்டுப்பேசுகிறார். “என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்” (1 கொரி. 9:27). “ஏனெ னில் மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிர பஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு,” என்று (எபேசியர் 6:12) பவுல் கூறுகிறார்.

## போராட்டம் யாருக்கு

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பல வருடங்களானவர்களுக்கத்தான் இந்தப் போராட்டம் உண்டு என்பதல்ல. இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட அடுத்த நாள் தொடங்கி நமக்கு இந்தப் போராட்டம் உண்டு. எடுத்துக்காட்டாக, இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்குமுன் நமக்கு நிறைய நண்பர்கள் இருந்திருப்பார்கள். ஆனால், நம் சரித்திரத்தைப் பார்த்தால் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபின் நண்பர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கும். இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு முன் மிகவும் நகைச்சுவையாக பேசிய தைரியமான சில சகோதரர்களை நாம் பார்த்திருப்போம். நான் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்குமுன்பும் எனக்கு நண்பர்கள் குறைவுதான், பின்பும் குறைவுதான். வேறு சிலர் அப்படி இல்லை. சிலருக்கு நண்பர்களை வசீகரிக்கிற தன்மை உண்டு. அவர்களைப் பார்த்தால் அவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின் அவர்களுடைய நண்பர் களின் எண்ணிக்கை மெல்ல மெல்ல குறைந்து விடும். அது மட்டும் அல்ல, அந்த நண்பர்கள் கேலி யும்பண்ணுவார்கள்.

வாணியம்பாடியில் இருக்கிற சகோதரன் பால்சிலுவையை எப்படியெல்லாம் கேலி பண்ணினார்கள் என்று எனக்குத் தெரியும். மதுரை தியாகராயர் பொறியியல் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த போது, அவருடைய அறையைக் கடந்துபோகும்போது, “சாமி எங்களுக்காக ஜெபம் பண்ணிக் கொள்ளுங்கள், சாமி,” என்று சொல்லிவிட்டுப் போவார்கள். ஒருமுறை கல்லூரி விடுதியில் “இந்த செமஸ்டர் கேள்வித்தாளை ஃபாதர் பால்சிலுவைக்கு ஆண்டவர் வெளிப்படுத்திவிட்டார்,” என்ற ஓர் அறிக்கையை ஒட்டிவிட்டார்கள். அவருடைய அறையைச் சுற்றி பயங்கர கூட்டம் கூடிற்று. பால் சிலுவை இரட்சிக்கப்படுவதற்குமுன் அவருடைய கூட்டம்தான் பெரிய கூட்டம். அரங்கத்தில் யாரா வது பேசும்போது மாணவர்கள் மேடையில் பேசுபவர்களைப் பார்க்கமாட்டார்கள். இவர் அரங்கத்தில் கடைசியில் இருப்பார். இவரையும் இவருடைய கூட்டத்தையும்தான் பார்ப்பார்கள். ஆனால், இரட்சிக் கப்பட்டபின் அதிகமான பாடநுபவித்தார். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபிறகு நிறைய பாடநு பவித்தார். எனக்கு நன்றாகத் தெரியும். இவர் இரட்சிக்கப்படுவதற்குமுன் ஒவ்வொரு இரவும் படுக்கச் செல்வதற்குமுன் முகத்தைக் கழுவி குங்குமம் வைத்துக்கொண்டு போவார். “எதற்கு”? என்று கேட் டால், “அப்போதுதான் கனவில் அழகாக வருவேன்,” என்பார். இவைகள் ருசிகரமான தகவல்கள் என்பதற்காக நான் சொல்லவில்லை. ஒருவன் என்றைக்கு இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள் கிறானோ, என்றைக்கு இயேசுகிறிஸ்துவின் சீடனாக மாறுகிறானோ அன்றைக்கு அவனுக்குப் போராட்டங்கள் ஆரம்பித்துவிடுகின்றன.

## உலகத்தின் பகை

"நான் உலகத்தானல்லாததுபோல நீங்களும் உலகத்தாரல்ல. உலகம் உங்களைப் பகைத்தால் அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்," என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறினார். உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதீர்கள். சொல்லப் போனால் உலகம் உங்களைப் பகைக்காவிட்டால் ஆச்சரியப்படுங்கள். உலகம் நம்மைப் பகைக்கும். உலகம் நம்மைப் பகைக்காவிட்டால் கிறிஸ்து நம்மில் வாழ்கிறாரா என்று ஆச்சரியப்படக்கூடும். "உல கத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றைக்கும் நிலைத்திருப்பான்," என்று யோவான் தன் நிருபத்தில் கூறுகிறார். *(1 யோவான் 2:15-17)*. ஏன்? "அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள்," என்று பேதுரு கூறுகிறார் *(1 பேதுரு 4:4)*. இயேசுகிறிஸ்துவின் சீடர்கள், விசுவாசிகள், பாடநுபவித்தார்கள். உலகத் தால் எப்போதும் பகைக்கப்பட்டார்கள், வெறுக்கப்பட்டார்கள், சித்திரவதைப்படுத்தப்பட்டார்கள் என்று சுவிசேஷத்திலிருந்து திருவெளிப்பாடுவரை நாம் பார்க்கிறோம்.

இதுதான் நம் சரித்திரம். எப்போதெல்லாம் தேவனுடைய பிள்ளைகள் உலகத்தால் சித்திரவதை செய் யப்பட்டார்களோ அப்போதெல்லாம் தேவனுடைய சுவிசேஷம் மிக வேகமாகப் பரவியது. எப்போ தெல்லாம் அவர்கள் சாம்ராஜ்யத்தின் உதவியை நாடினார்களோ அப்போதெல்லாம் சாத்தான் தன் புளித்த மாவை தேவனுடைய பிள்ளைகள் மத்தியில், சபைக்குள், கொண்டுவந்தான். கான்ஸ்டன் டைன் தன்னை கிறிஸ்தவன் என்று பிரகடனம் செய்வதற்குமுன் சபை சுத்தமாகவும், தூய்மையாக வும், வேகமாகவும் இருந்தது. "நானும் ஒரு கிறிஸ்தவன். சிலுவையை நான் பார்த்துவிட்டேன்," என்று ரோம சக்கரவர்த்தியாகிய கான்ஸ்டன்டைன் என்றைக்குச் சொன்னானோ அன்றைக்கு எல்லாக் கலப்படமும் தேவனுடைய சபைக்குள் வர ஆரம்பித்தது.

## கிறிஸ்தவ வாழ்க்கை–போராட்டம்

எனவே, போராட்டம் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒரு பகுதி. தேவன் நமக்கு ஓர் ஆசீர்வாதத் தைக் கொடுக்கவேண்டும் என்று நினைத்திருந்தால்கூட அதிலும் ஒரு போராட்டம் இருக்கும். "தேவன் தருவதாக இருந்தால் அதில் எப்படி போராட்டம் இருக்கும்?" என்று நாம் சொல்லலாம். போர் இருக் கும், போராட்டம் இருக்கும். ஆனால், நாம் அதைப் பிடுங்கிக்கொள்ள மாட்டோம். எதிர்ப்பு இருக் கும்.

பழைய ஏற்பாட்டில் தேவன் இஸ்ரயேல் மக்களிடம், "நான் உங்களைப் பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்துக்குக் கொண்டுபோவேன்," என்று கூறினார். அந்தத் தேசத்தைப்பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம், "நான் உங்களுக்குக் கொடுத்த தேசம், நான் உங்களுக்குக் கொடுத்த தேசம்" என்று கொடுப்பதற்குமுன்பே கொடுத்துவிட்டதாகத்தான் கூறுகிறார். தேவனைப் பொறுத்தவரை அது கொடுக்கப்பட்ட தேசம். என்றைக்கு கொடுத்ததாக வாக்குத்தத்தம் பண்ணினாரோ அன்றைக்கே அவர் கொடுத்துவிட்டார். ஆனால், அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு அணிவகுப்பு செய்து கானானுக் குள் நுழையவில்லை. ஒவ்வொரு சதுர அங்குலத்தையும் சுதந்தரிப்பதற்கு அவர்கள் போராட வேண்டியிருந்தது. இந்தக் கோட்பாட்டை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நமக்குப் போராட்டம் உண்டு.

நம்முடைய போராட்டம் மனிதர்களோடு அல்ல. ஒருவன் நம்மை எதிர்ப்பான் என்றால் மனிதனை நம் எதிரியென்றோ அல்லது பகைவன் என்றோ நாம் கருதக்கூடாது. எபேசியர் 6ஆம் அதிகாரத்தில் பவுல் இதைத் தெளிவுபடுத்துகிறார். நம் போராட்டம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல. நம் முடைய போராட்டம் சாத்தானோடும், அவனுடைய சேனைகளோடும். சாத்தான் தன் சேனைகளை இந்த ஆகாயமண்டலத்திலே நிறுத்திவைத்திருக்கிறான. தேவன் தன் படையை இந்தப் பூமியில் நிறுத்திவைத்திருக்கிறார். சாத்தானும் தன் படையை நிறுத்திவைத்திருக்கிறான். நாம் மனிதர்களைப் பார்க்கக்கூடாது. மனிதர்களுக்குப் பின்னால் இருக்கிற ஆவியைப் பார்க்க வேண்டும். சாத்தான் அவர்களை ஏவி விடுவான். "இந்த மனிதனை எதிர்த்துநில். அவன் இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சியாக இருக்கிறான்," என்று அவன் மனிதர்களை ஏவிவிடுவான்.

## கிறிஸ்துவை வெளியாக்குதல்

நமக்குச் சொந்தமில்லாத ஒரு ரூபாயை நாம் எடுக்கமாட்டோம் என்று சொல்லும்போது நாம் இயேசு கிறிஸ்துவை வெளியாக்குகிறோம். நான் பாடுவதை நேசிக்கிறேன், ஜெபிப்பதை நேசிக்கிறேன், துதிப்பதை நேசிக்கிறேன். இயேசுகிறிஸ்துவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற ஒவ்வொரு செயலும் நாம் தேவனை ஆராதிப்பதும், வெளியரங்கமாக்குவதுமாகும். நம் ஆராதனையும், துதியும் அரை மணி நேரமோ, ஒரு மணி நேரமோ அல்லது நாம் கூடிவருகிற ஒரு மணி நேரமோ அல்லது இரண்டு மணி நேரமோ அல்ல. அது மட்டும் அல்ல.

இந்த சாட்சியை நான் பயன்படுத்துகிறேன். வயதானவர்களைப் பார்க்கும்போது நாம் எழுந்து நிற்கிறோம். இது ஆவியானவரால் உண்டானது. அதன் விளைவு எனக்குப் பாடு என்றால் அதில் நான் வருத்தப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. அதின் விளைவு இயேசுகிறிஸ்து வெளியாகிறார் என்றால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இன்னும் சொல்லப்போனால் இயேசுகிறிஸ்து வெளியாவதற்கு கொஞ்சம் பாடு இருக்க வேண்டும். சிலுவையின் கிரியை இல்லாமல் இயேசுகிறிஸ்துவை வெளியாக்குதல் நடைபெறாது. சிலுவையின் கிரியை இல்லாமல் உயிர்த்தெழுதல் நடைபெறாது. இதற்கு வேறு எந்தக் குறுக்கு வழியும் இல்லை. நாம் கை தட்டுவதும், குரலை உயர்த்துவதும் உயிர்த்தெழுதலைக் கொண்டுவராது. ஆனால், கர்த்தர் நமக்கு அமைத்துத் தரும் சிலுவையின் வழியாகச் செல்வது நிச்சயமாக உயிர்த்தெழுதலைக் கொண்டுவரும். உயிர்த்தெழுதல் என்பது தேவனை வெளியாக்குவது. எந்த மனிதனும் அதை உற்பத்திசெய்ய முடியாது. No man can manufacture resurrection. The best of the doctors cannot manufacture resurrection. Resurrection is the vindication of God. This is God and God alone.

உடனே நாம் ஒரு வெள்ளைத் தாளை எடுத்துவைத்துக்கொண்டு, "எத்தனை அலகு கிறிஸ்து வெளியானார்? இவர்கள் என்னிடமிருந்து இயேசுகிறிஸ்துவைப் பெற்றுக்கொண்டார்களா இல்லையா? இவர்கள் கிறிஸ்துவின் வாசனையை முகர்ந்தார்களா இல்லையா?" என்று கணக்குப்போட வேண்டிய அவசியம் இல்லை. இதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டாம். வாசனையை முகரலாம் அல்லது முகராமல் போகலாம். ஆனால் ஒன்று நிச்சயம். ஏதோ ஓர் அளவுக்கு கிறிஸ்து எனக்குள், உங்களுக்குள், பெருகுகிறார், அதற்கு பலன் வருமா வராதா? அதனால் பலன் வரலாம். மற்றவர்கள் என்மூலம் வாசனையை முகரலாம். அது இன்னொரு நாள் நடைபெறலாம். இதை நான் பலமாக விசுவாசிக்கிறேன். Christ has increased in me to certain degree. God never wastes even trivial incidents in our life. நம் தலையிலுள்ள முடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது என்றால் என்ன அர்த்தம்? தேவன் நம் வாழ்க்கையில் நடக்கிற மிகச் சாதாரணமான விஷயங்களைக்கூட வீணாக்குவதில்லை. அந்த மிகச் சாதாரணமான விஷயத்தில்கூட ஏதோ ஓர் அம்சத்தில் தேவன் கிறிஸ்துவின் சிறிதளவை நமக்குள் அடிப்பு வேலைப்பாடாய் உருவாக்குகிறார் என்று நான் விசுவாசிக்கிறேன். மற்றவர்கள் ஒருவேளை அதை உணராமல் போகலாம். நாமேகூட அதை உணராமல் போகலாம். இதை நான் செய்தால் அல்லது செய்யாவிட்டால் கிறிஸ்து எனக்குள் இந்த அளவுக்குப் பெருகுவார் அல்லது குறைவார் என்று பிரத்தியட்சமாக நமக்குத் தெரிந்தால் நாம் யாருமே அதைச் செய்யமாட்டோம்.

பல சமயங்களில் அவர் பெருகுவது "அவர் அப்புறம் கடந்துபோகிறவர்போல் காணப்பட்டார்" என்பதுபோல் இருக்கும். எம்மாவுக்குப்போன சீடர்களின் அனுபவம் இது. "பொழுது போயிற்று. எங்களோடு தங்கும்," என்று சீடர்கள் இயேசுவிடம் கூறினார்கள். நாம் ஏறகெனவே பார்த்ததுபோல அவர் தோட்டக்காரனைப்போல் தோன்றினார். பிரத்தியட்சமாகத் தோன்றி, "நான்தான் இயேசு கிறிஸ்து. நீ இதைச் செய்தால் நான் உனக்குள் பெருகுவேன். நீ இதைச் செய்யாவிட்டால் நான் உனக்குள் குறைந்துவிடுவேன். வா, உன் தீர்மானம் என்ன?" என்று கூறமாட்டார். இப்படிச் சொன்னால் நாம் எல்லாரும் உஷார் ஆகிவிடுவோம்.

## தேவனின் இடைப்படுதல்

தேவன் மிக மெல்லிய வகையில் இடைப்படுகிறார். பழைய ஏற்பாட்டில் அவர் தோன்றியபோதெல்லாம் அக்கினி, மின்னல், இடிமுழக்கம், பேரிரைச்சல் போன்றவைகள் ஏற்பட்டனவே என்று நாம் நினைக்கலாம். இன்று தேவனுடைய பிள்ளைகள் பலர் இப்படி spectacular manifestationனில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பரிசுத்த ஆவியால் நிரம்பிவிட்டோம் என்றால் பொருள்? "என்ன, ஒரு சத்தம்கூட இல்லையா? அப்படியானால் நான் நம்பமாட்டேன்," என்கிறார்கள். "பரிசுத்த ஆவியானவர் இறங்கியபோது அப்படியே 1000 வால்ட் மின்சாரம் இறங்கியதுபோல் இருந்தது," என்று

தங்கள் அனுபவத்தை வருணிக்க முயற்சிக்கிறார்கள். *10* வால்ட் அனுபவம்கூட இல்லாமல் போயிருக்கலாம். பழைய ஏற்பாட்டில் ரொம்ப spectacular தீர்க்கதரிசி யார் தெரியுமா? எலியா. ஆனால், இந்த எலியாவின் அனுபவம் என்ன தெரியுமா? "அப்பொழுது இதோ கர்த்தர் கடந்து போனார். கர்த்தருக்கு முன்பாகப் பர்வதங்களைப் பிளக்கிறதும் கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்று உண்டாயிற்று. ஆனாலும், அந்தக் காற்றிலே கர்த்தர் இருக்கவில்லை. காற்றிற் குப்பின் பூமி அதிர்ச்சி உண்டாயிற்று. பூமி அதிர்ச்சியிலும் கர்த்தர் இருக்கவில்லை. பூமி அதிர்ச்சிக் குப்பின் அக்கினி உண்டாயிற்று. அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை. அக்கினிக்குப்பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று. அதை எலியா கேட்டபோது தன் சால்வையினால் தன் முகத்தை மூடிக்கொண்டு வெளியே வந்து, கெபியின் வாசலிலே நின்றான். அப்பொழுது இதோ எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்கிற சத்தம் அவனுக்கு உண்டாயிற்று" *(1 இரா. 19:11, 12).*

## சிலுவைப் பாடுகள்

போராட்டம் இல்லாமல் கிறிஸ்து நமக்குள் பெருகுவதுமில்லை, போராட்டம் இல்லாமல் நாம் கிறிஸ்துவை வெளியாக்குவதுமில்லை. இது போராட்டம். எந்த அளவுக்குச் சீக்கிரமாக நாம் இதை நம் வாழ்க்கையில் கற்றுக்கொள்கிறோமோ அந்த அளவுக்கு இது நல்லது. "இயேசுகிறிஸ்துவுக்காக நான் இந்த வாழ்க்கையை வாழ்கிறேன் அல்லது இந்த வார்த்தையைச் சொல்லுகிறேன் அல்லது சொல்லாமல் இருக்கிறேன்" என்றால் அது பாடு. இதுதான் சபையின் அஸ்திபாரம் என்று நான் சொல்லுவேன். நாம் இதை பாடுகள் என்று சொல்லக்கூடும். இது நாம் நம் வாழ்க்கையில் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை அனுபவிப்பது.

## கோதுமை மணி

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் இரண்டு விதமான பாடுகளை அனுபவித்தார். ஒன்று நம் பாவங்களுக்காக இரத்தம் சிந்துதல்; அந்தப் பாடுகளில் நமக்கு எந்தப் பங்கும் இல்லை. இன் னொரு பாடு அவருக்குள் இருந்த ஜீவனை மற்றவர்களுக்குள் பகிர்ந்தளிப்பதற்காக. ஒருவிதத்தில் அந்த பாடுகளில் நமக்குப் பங்குண்டு. இன்று இயேசுகிறிஸ்துவின் ஜீவன் நமக்குள் வைக்கப் பட்டிருக்கிறது. இந்த ஜீவன் எப்படி மற்றவர்களுக்குள் போகும்? அதே கோட்பாடுதான். எப்படி சிலுவை மரணம் அவருடைய மனுஷீகம் என்ற கூட்டை உடைத்து அவருக்குள் இருந்த ஜீவனை பல்லாயிரக்கணக்காக கோதுமை மணிகளுக்குள் செலுத்தியதோ அதுபோல நான் எந்த அளவுக்கு சிலுவையை, சிலுவை மரணத்தை, என் வாழ்க்கையில் கிரியைசெய்ய அனுமதிக்கிறேனோ, அந்த அளவுக்கு எனக்குள் இருக்கும் ஜீவன் பல கோதுமை மணிகளுக்குள், பல பத்து கோதுமைமணி களுக்குள், பல நூறு கோதுமைமணிகளுக்கு, பல ஆயிரம் கோதுமை மணிகளுக்குள், பல பத்தா யிரம் கோதுமை மணிகளுக்குள் செலுத்தப்படும். நான் எத்தனை ஆயிரம் கோதுமை மணிகளுக் குள் நமக்குள் இருக்கும் தெய்வீக ஜீவனை, கிறிஸ்துவின் ஜீவனைப் பகிர்ந்தளிப்போம் என்பது நான் எந்த அளவுக்கு இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தை அனுபவிக்கிறோம் அல்லது எந்த அளவுக்கு இயேசுவின் சிலுவை மரணத்தோடு ஒன்றாயிருக்க ஆயத்தமாயிருக்கிறோம் என்பதைப் பொறுத்தது.

"இப்படி மரணமானது எங்களிடத்திலும், ஜீவனானது உங்களிடத்திலும் பெலன் செய்கிறது," என்று பவுல் 2 கொரிந்தியர் 4:12இல் கூறுகிறார். "கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத் திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை, எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரி கிறோம்" *(2 கொரி. 4:10).* எப்படி ஊழியமானது ஒரு மனிதனிடத்தில் உருவாகிறது என்று 2 கொரிந் தியரில் பார்க்கிறோம். குறுக்கு வழி எதுவும் கிடையாது. ஒரு வேதாகமக் கல்லூரியில் படித்துவிட்டு வருகிறதினாலே அல்லது பேச்சு சாமர்த்தியம் உண்டு என்பதினாலே அல்லது மற்றவர்களுடைய உணர்ச்சிகளைத் தட்டிவிட முடியும் என்பதினாலே நாம் மற்றவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் ஜீவ னைக் கொடுத்துவிட முடியாது. இவைகள் மிகக் குறுகிய காலத்துக்குத்தான் நிற்கும். "மரணமானது எங்களிடத்திலும், ஜீவனானது உங்களிடத்திலும் பெலன் செய்கிறது." இதுதான் தேவனுடைய மாறாத கோட்பாடு. இதுதான் இயேசுகிறிஸ்துவின் கோட்பாடு. இதுதான் அவருடைய எல்லாச் சீடர்களின் கோட்பாடு. இதுதான் இன்று நம்முடைய கோட்பாடுமாகும்.

இது பாடநுபவிப்பதாகும். உலகம் அதை எதிர்க்கும். சாத்தான் அதை எதிர்ப்பான். உலகம் என்கிற முறைமை அதை எதிர்க்கும். "நீ என்ன நூதனமான கிறிஸ்தவனா? எனக்கு நிறைய கிறிஸ்தவர் களைத் தெரியும்," என்று கிண்டல் செய்வார்கள்.

ஓர் இந்தியர். ஆனால் அவர் ஜெர்மனியில் வாழ்கிறார். அவர் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியின் computer departmentக்கு scholarship ஆக 30 இலட்சம் ரூபாய் கொடுத்திருந்தார். அவர் சமீபத்தில் கல்லூரிக்கு வந்திருந்தார். சிலர் கூடிவந்திருந்தார்கள். பேச ஆரம்பித்தார்கள். கொஞ்ச நேரத்தில் குடிக்க ஆரம்பித்தார்கள். என்னைப்பார்த்து "கொஞ்சம் குடிக்கிறீர்களா?" என்று கேட்டார்கள். ஒருவர் அவர்களுடன் சேர்ந்து கொண்டார். நான் மறுத்துவிட்டேன். நான் இதை மாபெரும் வெற்றியாகக் கருதவில்லை. ஒருமுறை என் அப்பாவுக்கு வாங்கிக் கொடுத்த கள்ளைக் கொஞ்சம் ருசி பார்த்தேன். அப்போது, "இதைப்போய் மனிதர்கள் குடிக்கிறார்களே" என்று நான் நினைத்தேன். எனவே நான் ஒரு மாபெரும் வெற்றி பெற்றுவிட்டதாக நினைக்கவில்லை. இது அற்பமானது. சில சமயம் மற்றவர் களைச் சந்தோஷபடுத்துவதற்காகக் கொஞ்சம் ருசி பார்த்தால் என்னவென்றுகூடத் தோன்றலாம். அதற்கு 'Timothy's Wine' என்று பெயரும் கொடுத்துக்கொள்ளலாம். ஒரு கோப்பை குடித்துவிட்டு அடுத்த கோப்பைக்குப் போகும்போது அந்த ஜெர்மன்காரர் இன்னொரு விரியுரையாளரைப் பார்த்து, "என்ன, அடுத்த கோப்பைக்குப் போகலாமா?" என்று கேட்டார். அதற்கு அவர், "உம்முடைய மனைவி ஜெர்மனியில் இருக்கிறார். ஆனால், என் மனைவியோ தாம்பரத்தில் இருக்கிறார். நான் வீட் டுக்குப் போக வேண்டும்," என்று சொன்னார். உலகத்து மனிதனின் புத்திசாலித்தனத்தைப் பாருங்கள். இந்த உலகத்தோடு நாம், "ஆமாம்," போட முடியாது.

அதுவும் மாணவனாக இருக்கும்போது, கூட்டத்தோடு சேர்ந்து ஒன்றாகப் போக வேண்டும் என்பதை நாமெல்லாரும் ரசிப்போம். பால் சிலுவைராஜை நினைத்துப் பார்க்கிறேன். தேவனுக்குச் சித்த மானால் பால் சிலுவைராஜை அவருடைய சாட்சி சொல்வதற்காக ஒருமுறை கூப்பிட வேண்டும். "தூக்கு மேடைக்குப் போகும்போது நான் இயேசுவை என் இரட்சகராக ஏற்றுக்கொண்டேன்," என் பதுபோன்ற சாட்சியை நான் பொதுவாக ரசிப்பதில்லை. ஆனால், பால் சிலுவையின் சாட்சி மாண வர்களுக்கு மிகவும் உபயோகமான சாட்சியாக இருக்கும். ஒரு மாணவன் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு எப்படி பாடநுபவிப்பது என்பதற்கு அவருடைய சாட்சி நல்ல சாட்சி. நான் அவ் வளவு பாடநுபவிக்கவில்லை. ஏனென்றால் நான் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு முன்னும் அதிகமாகப் பேசவில்லை. ஏற்றுக்கொண்டபிறகும் அதிகமாகப் பேசவில்லை. எனவே, என்னை விட்டுவிடுவார்கள்.

## பிதாவின் திட்டம்

கர்த்தராகிய இயேசுவை அவருடைய எல்லா அம்சங்களிலும் நமக்குள் எப்படியாவது கொண்டுவர வேண்டும் என்பதுதான் பிதாவின் திட்டம். அதற்காக அவர் இரட்சிப்பைச் செய்துமுடித்தார். இன் றைக்கு அவர் பரிசுத்த ஆவியானவர் என்ற மகா சிற்பியின்மூலமாக பொறுமையாக அந்த வேலை யைச் செய்துகொண்டிருக்கிறார். தேவனுடைய பொறுமையை நினைக்கும்போது நான் மிகவும் வெட்கப்படுவேன். ஏனென்றால், பல சமயங்களில் நான் பொறுமை இழந்துவிடுவேன். ஏதாவது ஒன் றைப் பேசிவிட வேண்டும் அல்லது செய்துவிட வேண்டும் என்று துடிப்பேன். ஆனால், தேவனுடைய பொறுமைக்கு அளவேயில்லை. இயேசுகிறிஸ்துவை நமக்கு எல்லாமாக மாற்றுவதுகூட போர் இல்லாமல் நடைபெறுவதில்லை.

## கானானாகிய கிறிஸ்து

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துதான் பாலும் தேனும் ஓடுகிற நம் உண்மையான கானான். நாம் கிறிஸ்துவைத்தான் சுதந்தரிக்கிறோம். அவர் நம்மைச் சுதந்தரிக்கிறார். இது முழு வேதாகமத்தின் மையக்கருத்து என்று சொல்லலாம். ஒரு கூட்டம் மக்கள் கிறிஸ்துவைச் சுதந்தரித்துக்கொள்ள வேண் டும். எபிரேய மக்கள் எப்படி பாலும் தேனும் ஓடுகிற கானானை எல்லா அம்சங்களிலும் அனுபவித் தார்களோ அதுபோல நாம் கிறிஸ்துவை அவருடைய எல்லா அம்சங்களிலும் அனுபவிக்க வேண் டும். சுதந்தரிக்க எத்தனை வருடங்கள் ஆனது தெரியுமா? பல வருடங்கள் ஆயிற்று. 42 வருடங்கள் ஆயிற்று. நாம் இரட்சிக்கப்பட்டு 42 வருடங்கள் கழித்து கிறிஸ்துவைக் கொஞ்சமாவது சுதந்தரித்தால் நான் அல்லேலூயா என்பேன். சிலரைப் பார்க்கும்போது 42 வருடங்களுக்குமுன் அவர்கள் கிறிஸ்துவை எந்த அளவுக்கு சுதந்தரித்திருந்தார்களோ அதே அளவுக்குத்தான் 42 வருடங்களுக்குப் பிறகும், கல்லறைக்குப் போகும் போதும் சுதந்தரிப்பார்கள். தேவனுடைய பக்கத்தில் முழுக் கிறிஸ்துவையும் அவர் கொடுத்துவிட்டதாகச் சொல்வார். ஆனால், நம்முடைய பக்கத்தில் இந்தக் கிறிஸ்துவை கொஞ்சம் கொஞ்சமாக, சிறிது சிறிதாக, வரியின்மேல் வரியாக, பிரமாணத்தின்மேல் பிரமாணமாக, அங்கு கொஞ்சம், இங்கு கொஞ்சம் என்று நாம் சுதந்தரிக்க வேண்டும்.

கிறிஸ்து வெளியாக்கப்படுவதை சாத்தான் எதிர்ப்பான். நாம் ஒரு கொடிய எதிரியோடு போராடு கிறோம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால், கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கிறிஸ்துவே வெற்றிவீரர்! நம்முடைய வீட்டில், நம்முடைய அலுவலகத்தில், நாம் பிரயாணம் பண்ணும்போது கிறிஸ்து வெளியாக்கப்படுவதை எதிர்க்கும் ஓர் எதிரி உண்டு. சாத்தான். அவன் எதிர்ப்பான். ஒரு சூழ்நிலையில் கிறிஸ்து சிறிதளவாவது வெளியாக்கப்பட்டால், சாத்தான் தோற்கடிக்கப்படுகிறான், வெட்கப்படுத்தப்படுகிறான், கிறிஸ்து வெற்றி பெறுகிறார், மகிமைப்படுத்தப்படுகிறார். எங்கெல்லாம் உயிர்த்தெழுதல் நடைபெறுகிறதோ, அங்கெல்லாம் கிறிஸ்து மகிமைப்படுத்தப்படுகிறார், கிறிஸ்து வெளியரங்கமாக்கப்படுகிறார்.

### எப்படிப்பட்ட யுத்தம்

யுத்தம் உண்டு. போராட்டம் உண்டு. கிறிஸ்துவை வெளியாக்குவதற்கு அல்லது வெளியரங்கமாக்குவதற்கு நாம் சாத்தானோடு கத்தியை வைத்து சண்டை பண்ணப்போகிறோமா? சாத்தானோடு எப்படி சண்டை போடுவது? இயேசுகிறிஸ்து எப்படி சண்டை போட்டார்? கத்தியை வைத்தா? சொல்லப்போனால் கத்தி எடுத்தவர்களைக் கடிந்துகொண்டார். சில சமயங்களில், "நான் மட்டும் இரட்சிக்கப்படாத காலத்தில் இது நடந்திருந்தால் என்ன நடந்திருக்கும் தெரியுமா?" என்று நான் பேசியிருக்கிறேன். நாமெல்லாரும் பேசியிருக்கிறோம். அப்படி பேசிவிட்டு நான் மனந்திரும்பியிருக்கிறேன். அப்படிப் பேசாதவரை நான் இரட்சிக்கப்படாத காலம் ஒன்று இருந்தது என்பதை நான் நினைவில் வைத்திருக்கிறேன் என்று பொருள். அது மட்டும் அல்ல. அதில் கொஞ்சம் பெருமையும் பட்டுக்கொள்ளுகிறோம். "நான் மட்டும் இரட்சிக்கப்படாத காலத்தில் இருந்திருந்தால்.."இது நம்மை அம்பலப்படுத்திவிடும். நாம் பலவீனர்கள். நாம் கையாலாகாதவர்கள்.

ரோமப் போர்வீரர்கள் இயேசுவைக் கைதுசெய்ய வந்தபோது பேதுரு வாளை எடுத்து மல்குசின் காதை வெட்டி, "நான் இவ்வளவு பெரிய ஆள் தெரியுமா?" என்று கேட்டதுபோல் இருந்தது. What a big boy am I! மனிதனுடைய இரத்தத்திலே, மாம்சத்திலே, எலும்பிலே இது ஊறியிருக்கிறது. "What a big boy am I என்று நான் பத்துபேருக்கு முன்பாகவாவது என்னைக் காட்டியாக வேண்டும். பத்து பேருக்குமுன் காட்டமுடியாவிட்டால் குறைந்தது ஐந்து பேருக்கு முன்பாவது காட்டவேண்டும். ஐந்து பேருக்கு முன்பாக காட்டமுடியாவிட்டால் குறைந்து என் மனைவிக்கு முன்பாகவாவது காட்டியாக வேண்டும்," என்பது மனிதனுடைய பலவீனம். "நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?" என்று இயேசு கிறிஸ்து கேட்டார்.

பழைய ஏற்பாட்டில் ஒரு நிகழ்ச்சி உண்டு. ஒரேவொரு தூதன் வந்து அசீரியரின் படை முழுவதையும் ஒரே இரவில் துவசம் பண்ணிவிட்டுச் சென்றுவிடுகிறான். 1,85,000 பேர். "நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?" என்று இயேசு கேட்டார். (மத். 26:53). நல்ல காலம்... நாம் இப்படி ஜெபித்தால் தேவன் அப்படிப்பட்ட ஜெபத்துக்கு பதில்தர மாட்டார் என்று நான் நினைக்கிறேன். யார் கேட்டால் தேவன் லேகியோன் தூதர்களை அனுப்புவார் என்று கர்த்தருக்குத் தெரியும். யார் பிதாவை நோக்கி, "நீர் தரும் பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" என்று சொல்லுகிறார்களோ அவர்களுடைய ஜெபத்துக்கு அவர் பதிலளிப்பார்.

### சிலுவை வழி

ஆண்டவராகிய இயேசு எருசலேமை நோக்கி தன் முகத்தை ஒரு பாறையைப்போல் வைத்திருந்தார் என்று வேதம் சொல்லுகிறது. மாற்கு சுவிசேஷத்தை நீங்கள் வாசித்துப்பாருங்கள். அவர் ஒவ்வொரு வாரமாகப் பேசுகிறார். கடைசி வாரத்தில் ஒவ்வொரு நாளாகப் பேசுகிறார். கடைசி நாளில் ஒவ்வொரு மணிநேரத்தைப் பற்றியும் பேசுகிறார். அந்தக் கடைசி ஒரு வாரத்தில் அவர் தன் முகத்தை எருசலேமை நோக்கி ஒரு கல்லைப்போல் வைத்திருந்தார். அப்படியானால் என்ன அர்த்தம் என்றால் அவர் சிலுவை மரணத்தைத்தவிர வேறு எதை நோக்கியும் இடது பக்கமோ அல்லது வலது பக்கமோ திரும்பவில்லை. திரும்பத் தயாராக இல்லை. அப்போதுதான் பேதுரு அவரை நோக்கி, "என்ன நீர் பேசுகிறீர்? நீர்தான் மேசியா என்று நினைத்து நாங்கள் உம்மைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம்," என்று கூறுகிறார். அவரைத் தனியே அழைத்துக் கொண்டுபோய், "நீர் இப்படியெல்லாம் பேசாதீர். இவைகள் உமக்கு சம்பவிக்கக்கூடாது," என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்

கினான். கர்த்தரும் அவரைத் தனிமையிலேயே கடிந்துகொள்கிறார். “அப்பாலே போ சாத்தானே,” என்று கடிந்துகொண்டார்.

நாம் நம் சகோதரர்களை, ‘அன்பான சகோதர சகோதரிகளே, பிரியமான சகோதர சகோதரிகளே’ என்று கூப்பிடுவதுபோல ஒரு பாஸ்டர் விசுவாசிகளை, “பேயே, இங்கு பார்; பேயே, திரும்பாதே; பேயே, முழங்கால்போட்டு ஜெபம் பண்ணு,” என்று கூப்பிடுவார். ஏனென்றால், இயேசு பேதுருவை ‘சாத்தானே’ என்று கூப்பிட்டாராம். யூதாஸ் ஆண்டவரை முத்தமிட்டுக் காட்டிக்கொடுக்கும்போது அவர் அவனைப் பார்த்து, “சிநேகிதனே” என்றாரல்லவா, நாம் அப்படிக் கூப்பிட வேண்டும். “சிநேகி தனே, இந்தப் பக்கம் பார். சிநேகிதனே, இப்படிச் செய்.”

அவர் முகத்தை கல்லைப்போல் வைத்துக்கொண்டார். அப்படியானால் என்ன அர்த்தம்? எதிர்ப்பு இருக்கிறது. “கொலைசெய்வார்கள். அதனால் அவர்களோடு ஒத்துப்போவதுதான் நல்லது,” என் பதா? கர்த்தர் ஒரு சூழ்நிலையை அமைத்து நம்மை சிலுவையை அனுபவிக்கச் செய்வார். ஆனால், நாம் எறும்பைப்போல நடந்துகொள்வோம். அதற்குமுன் ஒரு தடையை வைத்தால் அதைச் சுற்றிப் போகத்தான் முயற்சிசெய்யும். மனிதர்களை சிலுவை என்று நாம் ஒருநாளும் சொல்ல வேண்டாம். சூழ்நிலையில் சிலுவையை அனுபவிக்கக்கூடும். கர்த்தர் தம்மைப் பலவீனப்படுத்தினார். அவர் தம் மாம்சத்திலோ அல்லது சுயத்திலோ அல்லது தேவனுடைய குமாரன் என்ற தளத்திலோ ஒருநாளும் செயல்படவில்லை. மனித குமாரன் என்ற முறையில் மட்டும்தான் அவர் செயல்பட்டார். மனித குமா ரன் என்ற தளத்திலே மட்டும்தான் அவர் வாழ்ந்தார். “நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்,” என்று சாத்தான் இயேசுகிறிஸ்துவிடம் சொல்லி அவரைச் சோதிக்கிறான். “நீர் யார்? தேவனுடைய குமாரன் என்ற தளத்துக்கு வாரும்,” என்று சோதிக்கிறான். ஆனால், அவரோ மனித குமாரன் என்ற தளத்தில்தான் நின்றார். “மனுஷன் அப்பத்தினாலே மாத்திர மல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே,” என்று சொன்னார். “நீர் தேவனுடைய குமாரன்தானே?” ஆம். ஆனால் நான் மனிதன் என்ற முறையில் தான் வாழ்கிறேன்.” அவர் தேவனுடைய குமாரன் என்ற முறையில் வாழ்ந்திருந்தால் நாம் யாரும் அவர் விட்டுச் சென்ற அடிச்சுவடுகளிலே வாழலாம் என்று சொல்ல முடியாது. அவர் தேவனுடைய குமாரனாக வாழ்ந்தார் என்று சொல்லி விட்டிருப்போம். கர்த்தர் மனிதன் என்ற முறையிலே பிதாவை வாழ்ந்தார், பிதாவுக்குக் கீழ்ப்படிந்தார், பிதாவின் வார்த்தை களைப் பேசினார், வேலைகளைச் செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அதன்மூலமாகத்தான் கிறிஸ்து வெளியாக்கப்பட்டார். சிலுவையின் மூலமாக வந்த உயிர்த்தெழுதல். இது தேவன் நமக்கு வைத்திருக்கிற போராட்டம்.

ஆனால், இதைப் போராடுவது நம் மாம்சத்துக்குரிய அல்லது சுயத்துக்குரிய அல்லது நம் இயற்கை மனிதனுக்குரிய யுக்திகளை வைத்தல்ல அல்லது ஆயுதங்களை வைத்தல்ல. “நம்முடைய ஆயு தங்கள் மாம்சத்துக்குரியவைகள் அல்ல.” இதை நான் யோசித்துப் பார்த்தேன். நம்முடைய திறமை, நம்முடைய பேச்சு சாமர்த்தியம், மற்றவர்களுடைய உணர்ச்சிகளைத் தட்டியெழுப்புகிற சாமர்த்தியம், நம்முடைய பண சாமர்த்தியம்; மாம்சத்துக்குரிய இந்த சாமர்த்தியங்களை வைத்து நாம் கிறிஸ்துவை வெளியாக்க முடியாது அல்லது கிறிஸ்துவை மற்றவர்களுக்குள் பகிர்ந்தளிக்கவும் முடியாது.

பெரிய விளம்பர முகாம்; மாபெரும் ஊடகங்களின் முகாம். இயேசுவோ, அவருடைய சீடர்களோ அல்லது பவுலோ தொலைக்காட்சியில் தோன்றி, “எனக்கு இத்தனை ரூபாய் காணிக்கை அனுப் புங்கள். இல்லாவிட்டால் தேவனுடைய ஊழியம் முடங்கிவிடும். நீங்கள் காணிக்கை அனுப்பாவிட் டால் நான் பெத்தானியா செல்ல முடியாது,” என்று சொல்வதாக நாம் கற்பனை செய்து பார்க்க முடியுமா? இது நாம் சேவிக்கிற தேவனுக்கு அவமானம்.

“என்னை விசாரிப்பதற்கு நீங்கள் இப்பொழுது மறுபடியும் மனமலர்ந்தபடியினாலே கர்த்தருக்குள் மிகவும் சந்தோஷப்பட்டேன். இப்படிச் செய்ய எண்ணங்கொண்டிருந்தீர்கள். சமயம் மாத்திரம் உங் களுக்கு நேரிடவில்லை,” என்று பவுல் பிலிப்பியருக்கு எழுதுகிறார். தேவனுடைய பிள்ளைகளை அவர் எவ்வளவு சௌகரியமாக்குகிறார் பாருங்கள். “என்னை விசாரிப்பதற்கு நீங்கள் இப்பொழுது மறுபடியும் மனமலர்ந்தபடியினாலே கர்த்தருக்குள் மிகவும் சந்தோஷபட்டேன்,” என்று சொல்வதாலே அவர்கள் புண்பட்டுவிடுவார்களோ என்று நினைத்து, “நீங்கள் எப்போதும் என்னை நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். அதைச் செய்வதற்கு உங்களுக்கு வாய்ப்புதான் கிடைக்கவில்லை. இப்போது கிடைத்திருக்கிறது,” என்பதுபோல் அவர் கூறுகிறார்.

“நாங்கள் அந்த ஊருக்குப் போனோம். அங்கு பத்துபேர் இரட்சிக்கப்பட்டார்கள். நாங்கள் இந்த ஊருக்குப் போனோம். இங்கு பதினைந்துபேர் இரட்சிக்கப்பட்டார்கள். அந்த ஊரில் ஒரு சபை கட்டிக்கொண்டிருக்கிறோம்,” என்று இயேசு சொல்லிக்கொண்டிருந்தாரா? கிறிஸ்துவின் சிலுவை நம் வாழ்க்கையில் வேலைசெய்ய நாம் அனுமதிப்போம். அதுதான் நம்முடைய போராட்டம். நம் போரோ அல்லது போராயுதங்களோ மாம்சத்துக்குரியவைகளல்ல. இன்றைக்கு தேவனுடைய பிள்ளைகள் அவர்கள் வாழ்கிற உலகத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமானால், “எங்களிடத்தில் எந்த ஊடகமும் இல்லை. அதனால்தான் எதுவும் செய்ய முடியவில்லை. ஒரு video camera கொண்டு வாருங்கள். அது மிகவும் பிரயோஜனமாக இருக்கும்,” இதற்கு அர்த்தம் நிருபங்களைப் பனை ஓலையில்தான் எழுத வேண்டும் என்று நான் சொல்லவில்லை. நான் old fashioned ஆள் என்று அர்த்தம் இல்லை. நமக்கு அவைகள் தேவைப்படக்கூடும். ஆனால், நம் தலையாய தேவை அது வல்ல. நம் தலையாய தேவை நாம் எந்த அளவுக்கு சிலுவையின் வழியாகச் சென்று, கிறிஸ்துவை உயிர்த்தெழுதலில் வெளியாக்குகிறோம் என்பதே. “மரணம் எங்களிடத்திலும் ஜீவனானது உங்க ளிடத்திலும் கிரியை செய்கிறது.”

## எசேக்கியேலின் பலிபீடம்

எசேக்கியேல் ஒரு பெரிய ஆலயத்தைப்பற்றிய தரிசனத்தைப் பார்த்தார். பழைய ஏற்பாட்டில் கூடா ரத்தில் நுழைந்ததும் வாசலிலே பலிபீடம் இருந்தது. அது பெரிய பலிபீடம். கூடாரத்தைப் பிரித்தால் கூடாரத்திலுள்ள எல்லா தட்டுமுட்டுச் சாமான்களையும், எல்லாப் பாத்திரங்களையும் அந்தப் பலி பீடத்தில் வைத்துவிடலாமாம். அந்த அளவுக்கு அது பெரியது. கிறிஸ்துவின் சிலுவை மரணம் பெரிய சிலுவை மரணம், சகலத்தையும் உள்ளடக்கியது. அதில் மற்ற எல்லாவற்றையும் அடக்கி விட லாம். ஆனாலும், பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்கள் பிரயாணம் பண்ணியபோது அவர் களிடையே இருந்த கூடாரத்தில் பலிபீடம் நுழைவாயிலருகே இருந்தது. ஆனால், எசேக்கியேல் பார்த்த தரிசனத்தில் பலிபீடம் ஆலயத்தின் நடுவில் இருந்ததாம். அது சதுரவடிவில் இருந்த தேவா லயம். இரண்டு மூலைவிட்டக் கோடு வரைந்தால் அவை இரண்டும் சந்திக்கும் இடத்தில்தான் பலி பீடம் இருந்ததாம். இது எதைச் காட்டுகிறது என்றால், தேவாலயம் அல்லது தேவனை வெளி யாக்குகிற, கிறிஸ்துவை வெளியாக்குகிற ஒரு கூட்டம் மக்கள் வேண்டுமென்றால் அவர்களுடைய வாழ்க்கையின் மையத்தில் கிறிஸ்துவின் சிலுவை மரணம் இருக்க வேண்டும். முதல் அம்சமாக அதுதான் இருக்க வேண்டும். பாவங்களை மன்னிக்கிற அம்சத்திலும் அதுதான் முதல் அம்சமாக இருக்க வேண்டும்; நம்முடைய அனுபவ அம்சத்திலும் அது இருக்க வேண்டும். ஒரு கூட்டம் மக்கள் கூடிவாழும்போது கிறிஸ்துவின் சிலுவை நம் அன்றாட வாழ்க்கையின் மையமாக இருக்குமென்றால் அங்கு தேவன் வெளியாக்கப்படுவார். அது இரண்டு பேராக இருந்தாலும் சரி, பத்துபேராக இருந் தாலும் சரி, நம் குடும்பமாக இருந்தாலும் சரி, நாம் வேலைபார்க்கும் இடமாக இருந்தாலும் சரி, தேவனுக்கு சிலுவையிலறையப்பட்ட மக்கள் தேவை. தேவனுக்கு பேச்சு சாமர்த்தியம் உள்ள மக்கள் தேவை இல்லை. God does not need eloquent men and women. God does not need technology savvy men and women. He needs crucified men and women.

## சாலொமோன் ஆலயம்

சாலொமோன் எந்த இடத்தில் தேவாலயத்தைக் கட்டினார் என்று நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நான் நினைக்கிறேன். அது அர்வனாவின் களமாக இருந்தது. இன்னொன்று, மோரியா மலையிலே ஆபிரகாம் தன் மகனாகிய ஈசாக்கைப் பலியிட்டான். இஸ்ரயேலில் ஒரு பெரிய வியாதி வந்தபோது அது நின்ற இடம் அதுதான். அந்த இடத்தில் தாவீது பலியிட வருகிறான். அங்கு அர்வனா களத் தில் இருக்கிறான். இராஜாவே பலியிட வந்திருப்பதைப் பார்த்து அர்வனா, “நீங்கள் எதை வேண்டு மானாலும் எடுத்துக்கொள்ளுங்கள். என் மாடுகளை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள்,” என்று சொன்னான். அப்போது தாவீது என்ன சொன்னான் தெரியுமா? “அதை நான் ஒரு விலை கொடுத்து வாங்குவேன். I will not offer to God anything that does not cost me anything.” தேவன் வெளியரங்கமாக வேண்டும் என்று விரும்புகிறீர்களா? Do you want the manifestation of God? It would cost us something. It will cost everything that we like. It will cost our pleasure. தாவீது ஒரு விலைக்கிரயம் செலுத்தி அந்த இடத்தில் பலி செலுத்தினான். இது ஒரு கோட்பாடு.

**சிலுவையிலறையப்பட்ட மக்கள்**

எந்த இடத்தில் தேவாலயம் கட்டப்படமுடியும்? சரியான உபதேசங்களை இவர்கள் கண்டுபிடித்து விட்டார்கள். எனவே, இதுதான் சபை அல்லது உள்ளூர் என்ற தளத்திலே இவர்கள் நிற்கிறார்கள். எனவே, இதுதான் சபை!!! அது சபையே அல்ல. எங்கு சகோதர சகோதரிகள் சிலுவையிலறையப் பட்ட வாழ்க்கை வாழ்கிறார்களோ அங்கு தேவாலயம் இருக்கும். அதுதான் சபை. எங்கு பரிசுத்த ஆவியானவரின் கொடைகள் அதிகமாக செயல்படுகின்றனவோ அதுவா சபை? இல்லை. Where there is manifestation of God through a group of crucified men and women there God has a channel to express Him. எசேக்கியேல் பார்த்த தரிசனத்தில் அப்படிப்பட்ட தேவாலயத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் புறப்பட்டு ஓடுகின்றன. பலிபீடத்தின் கீழிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் பாய்ந்தோடின. அந்தத் தண்ணீர் போன இடமெங்கும் சஞ்சரித்த ஜீவபிராணிகள் யாவும் பிழைத்தன. இந்தத் தண்ணீர் அங்கே வந்தபடியால் வெகு ஏராளமான மச்சங்கள் உண்டாயிருந்தன. இந்த நதி போகுமிடமெங்கும் யாவும் ஆரோக்கியப்பட்டுப் பிழைக்கும். நாம் எங்கு போகிறோமோ அங்கெல்லாம் மக்கள் வாழ வேண்டும். மக்கள் சொல்வார்கள்: “அவர் போனார், வந்தார்; நான் சந்தோஷமடைந்தேன். இவள் வந்து போனாள்; நான் உற்சாகமடைந்தேன். இவர் வந்து போனார். என் பாரங்களெல்லாம் உருண்டோடி விட்டன.” இது எப்படி? இவர்கள் சிலுவையிலறையப்பட்டவர்கள். இந்தச் சகோதரி சிலுவையிலறையப்பட்ட சகோதரி. இதுதான் யுத்தம்.